# மில்க்வைற் செய்தி
# Milk White News

தபாற்பெட்டி இல. 77, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23233

கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் ★ மாசி 1985 ★ இதழ் 110


## மண்ணீரம் காயுமுன் மரங்கள் நடுவோம் வாரீர்

சந்நியாசி ஒருவர் எந்த நேரமும் நடந்தாலும், இருந்தாலும், கிடந்தாலும், உண்டாலும், எழுந்தாலும் "சிவசிதம்பரம், சிவசிதம்பரம்" என்று உரக்கச் சொல்லி வந்தாராம். அங்ஙனமே பைத்தியக்காரன் ஒருவன் எந்த நேரமும் "கச்சேரி பத்திரம், கச்சேரி பத்திரம்" என்று கத்திக்கொண்டு திரிந்தானும். இந்த வகையில் மரம் நாட்டும் பணியில் பைத்தியங்கொண்ட தொழிலதிபர் தமது வளவின் ஒதுக்குப்புறமெங்கும் நாற்று மேடைகள் அமைத்து சவுக்கு, இப்பில் இப்பில், யூக்கலிப்ரஸ், வேம்பு, மலைவேம்பு, உயர்தர பலா முதலியன ஆயிரக் கணக்காகத் தேவைப்படும் எனக் கருதி உண்டாக்கியுள்ளார். எவரும் நடலாம் எங்கும் நடலாம் என்பதே இலட்சியமாகலின், நீங்கள் உங்கள் குழந்தைகளின் பிறந்தநாள் நினைவாக, திருமண நாள் நினைவாக, வேறெந்த வைபவத்தின் நினைவாகவேனும் ஏதாவது ஒரு மரத்தையோ, ஒவ்வொரு இனத்தில் ஒவ்வொன்றையோ நட்டு உண்டாக்கலாம். பழ மரமாயினும், இலைதழைதரு மரமாயினும், நிழல்தரு மரமாயினும் எங்கள் வரண்ட பிரதேசமெங்கும் வளமும் வனப்பும் வாழ்வும் தருவன மரங்கள் என்பதை மறக்கவேண்டாம். சவுக்கு, யூக்கலிப்ரஸ் விரைவில் வளர்ந்து விறகு தருவன.



இராமநாதன் கல்லூரி அதிபர் திருவாட்டி சச்சிதானந்தம் மில்க்வைற் வெளியிட்ட நீதிநூற்கொத்தின் பிரதிகளைப்பெற்று மேல் வகுப்புகளுக்கு விநியோகஞ் செய்தார்.

— உயர்ந்த பண்பெனில் உலகோர் ஏத்துவர் —

உ
சிவமயம்



# கடவுள் வணக்கம்

## திருநாவுக்கரசுநாயனுர் தேவாரம்
### திருநாரையூர் – திருத்தாண்டகம்

திருச்சிற்றம்பலம்

அரிபிரமர் தொழுதேத்தும் அத்தன் தன்னை
அந்தகனுக் கந்தகனை அளக்கலாகா
எரிபுரியும் இலிங்கபுரா ணத்து ளானை
எண்ணுகிப் பண்ணு ரெழுத்தா னுனைத்
திரிபுரஞ்செற் றெருமூவர்க் கருள்செய் தானைச்
சிலந்திக்கும் அரசளித்த செல்வன் தன்னை
நரிவிரவு காட்ட கத்தி லாடலானை
நாரையூர் நன்னகரிற் கண்டேன் நானே.

திருச்சிற்றம்பலம்

திருமாலும் பிரமனும் அன்றெருநாள் தொழுதேத்தி நிற்பச் சிவலிங்கத் திருமேனியில் ஓடுங்கிக் காட்சிகொடுத் தருளியவர், அந்தத்தைச் செய்பவனுகிய இயமனுக்கு அந்தத்தைச் செய்தருளுபவர், அவர் கொண்டருளிய அருவுருவமாகிய சிவலிங்கம் அளக்கலாகாலிங்கம், எரிபுரையும் ஒளியுள்ள லிங்கம். புராதனமான லிங்கம். (இப்புராதன வரலாற்றை இலிங்கபுராணம் கூறுகிறது) இத்தகைய பழைமை வாய்ந்த தாணுவாகிய சிவபெருமான் எண்ணுகவும் எழுத்தாகவும் பண்ணுர் எழுத்தாகவும் அருமையாக எழுந்தருளியவர். அவர் முன்னர் திரிபுரங்களை எரித்துத் திரிபுரத்தவராகிய தாருகாக்கன், கமலாக்கன், வித்துன்மாலி என்னும் மூவருக்கும் பேரருள்புரிந்து இருவரை வாயில் காப்போராகவும், ஒருவனை முழாவொலிப் பவனுகவும் கொண்டவர். முன்னர் ஒருசமயம் மரத்தின் கீழிருந்த சிவலிங்கத்தின் மீது சருகுகள் விழாதவாறு வலை கட்டிய சிலந்திக்கு மறுபிறப்பில் பேரரசு நல்கிய பெருமானுவர். அவர் நரிக்கூட்டங்கள் மிகுதியாகவுள்ள காட்டுப்பிரதேசத்தில் ஆடி மகிழ்பவர். அவரைத் திருநாரையூராகிய நல்ல நகரில் எழுந்தருளியிருப்ப அடியேன் கண்டு மகிழ்ந்து பாடினேன்.




## கேள்வி

கேட்டறிய வேண்டியவற்றைக் கற்றவர்கள் பால் கேட்டல்.

**செவியுணவில் கேள்வி உடையார் அவி உணவின்**
**ஆன்ருரோடு ஒப்பர் நிலத்து.**

செவி உணவாகிய கேள்வியினுல் பெற்ற அறிவு உடையவர்கள் வேள்வியில் செய்யும் உணவை ஏற்றுக் கொள்ளும் விண்ணவர்க்கு ஒப்பாவர்.

**Learning by Listening from the wise**

Acquiring knowledge through listening men are equal in fullness of knowledge to the gods that have their sacremential food.

## 1985 பெப்ருவரி மாத நிகழ்ச்சிகள்
(தமிழ்த் தை பிற்பகுதி மாசி முற்பகுதி)

| | | | |
|---|---|---|---|
| 1 | வெள்ளி | — | ஏகாதசி விரதம் |
| 3 | ஞாயிறு | — | பிரதோச விரதம் |
| 4 | திங்கள் | — | தைப்பூசம்,<br>கீரிமலை நகுலேசுவரம் கொடி,<br>மாவை லட்சார்ச்சனை நிறைவு |
| 5 | செவ்வாய் | — | பூரணை விரதம் |
| 12 | செவ்வாய் | — | தமிழ் மாசி. இரவு 6-50மேல் அட்டமி |
| 13 | புதன் | — | இரவு 2–56 வரை நவமி |
| 15 | வெள்ளி | — | ஏகாதசி விரதம் |
| 17 | ஞாயிறு | — | மகாசிவராத்திரி, பிரதோச விரதம்,<br>நகுலேசுவரர் தேர் |
| 19 | செவ்வாய் | — | அமாவாசை விரதம் |
| 25 | திங்கள் | — | முன்னேசுவரம் கொடி |
| 26 | செவ்வாய் | — | கார்த்திகை விரதம் |
| 27 | புதன் | — | பகல் 1–17 மேல் அட்டமி |
| 28 | வியாழன் | — | அட்டமி நவமி,<br>இந்திய முதல் சனுதிபதி<br>இராசேந்திரபிரசாத் நினைவுதினம் |

**Washing your school uniforms do it yourself with Milk White Washing Powder and save time**

★ பரந்த அறிவு பல நூலாய்வின் பயன் எனலாகும் ★

## உங்களுக்குத் தெரியுமா?

### (உடனுக்கு உடன் பதில்)

| என்பது எது? | | இதுதான். |
|---|---|---|
| புதிய ஏற்பாடு | — | பைபிள் இரண்டாம் பாகம் |
| செல்வந்தர் வீதி | — | வால் ஸ்றீற் |
| இத்தாலியின் அழகிய நகரம் | — | நேப்பிள்ஸ் |
| அமெரிக்க சுகஸ்தானம் | — | நியூஹாம்ஷயர் |
| புகையிலையின் நஞ்சு | — | நிக்கொட்டின் |
| கிஸ்மத் | — | தலைவிதி |
| நூறுலட்சம் | — | ஒருகோடி |
| மில்லியன் | — | பத்துலட்சம் |
| லட்சம் | — | நூறாயிரம் |
| பாடும் பறவை | — | லினற் |
| இந்தியத் தானியம் | — | சோழம் |
| காட்டுக் காய்ச்சல் | — | மலேறியா |
| பால் கொடுக்கும் பறவை | — | வெளவால் |
| செயற்கை வெண்ணெய் | — | மாஜறைன் |
| செய்தி | — | மில்க்வைற் வெளியீடு |
| நீம்சோப் | — | வேப்பெண்ணெய் கலந்த சோப் |
| நிர்வாணம் | — | புத்தமதத்தில் உயர் நிலை |
| நவம்பர் | — | ஒன்பதாம் மாதம் |
| மரமேறும் புலி | — | ஒல்கொட் |
| பகோடா | — | சீனரின் கோபுரம் |
| முத்துத்துறைமுகம் | — | ஹாவாய் |
| பேரோ | — | பழைய எகிப்திய மன்னர் |
| இழுபடும் பிசின் | — | றப்பர் |
| பொன்நகரம் | — | கலிபோனியா |
| சைபீறிய மறைபொருள் | — | ஆயுதபலம் |
| யூபோட் | — | நீர்மூழ்கிக்கப்பல் |
| தீவுகள் நிறைந்த சமுத்திரம் | — | பசிபிக் |
| தேள் இல்லாத நாடு | — | நியூசிலந்து |
| சீமை | — | லண்டன் |
| றாய்ட்டர் | — | செய்தித்திரட்டு |
| நாகரிக நகரம் | — | பாரிஸ் |
| மஞ்சள் ஆறு | — | குவாங்கோ |
| கிறம்லின் | — | ரஷ்யகோட்டை |
| தேக்கமர நாடு | — | பர்மா |
| யீடோ | — | ரோக்கியோ |

### முசுமுசுக்கை

எல்லோரும் இதன் அருமையை அறிதலாகாது எனக் கருதிய சிலர் இதற்கு இரண்டு குரங்குக்கை எனப்பெயர் புனைந்தனர். முசு குரங்கு, முசு, முசுகை சாதாரணமாக எருக்கும்பம், குப்பைமேடு, தோட்டவேலி எங்கும் கிடைக்கும் நொய்தான கொடியின் இலைகளை அரைத்து உண்பதால் நெஞ்சுவலி, புகைச்சல் முதலிய நோய்களைக் குணமாக்கும்.

## Learn your English

**I. Write the opposites of these by adding a suitable prefix.**

**Example:-** clock wise = anticlock wise

1. adulterated 2. magnetic
3. nationalize 4. considerate
5. limitable 6. honour
7. septic 8. decent
9. ball 10. clock wise

**Answers:**

1. unadulterated 2. non - magnetic
3. denationalize 4. inconsiderate
5. illimitable 6. dishonour
7. aseptic 8. indecent
9. no - ball 10. anti clock wise

**II. Give the synonyms of the following:-**

**Example:-** advantage = profit

1. blemish 2. fatique 3. crafty 4. agreement

**Answers:-**

1. defect 2. tiredness 3. cunning
4. harmony

**III. Give the antonyms of the following:-**

**Example:** care = neglect

1. cheerful 2. small

**Answers:**

1. gloomy 2. enormous

**IV. Find out the meanings of the following abbreviations:**

**Example:** O. H. M. S. = On Her Majesty's Service

1. P. T. O. 2. Ult 3. F. O. B.
4. C. O. D. 5. P. C.

**Answers:**

1. Please turn over 2. (ultimo) last month
3. free on board 4. cash on delivery
5. Police Constable

## பகவத் கீதையில் பெயர்கள்

கிருஷ்ணன், திருமால், கேசவன், நாராயணன், மாதவன், திரிவிக்கிரமன், வாமனன், ஸ்ரீதரன், இருடீகேசன், பத்மநாபன், தாமோதரன், கோவிந்தன், விண்டு, மதுசூதனன்.

அருச்சுனன், பல்குணன், பார்த்தன், கிரீடி, சுவேதவாகனன், பீபஸ்சு, விஜயன், கிருஷ்ணன், சவ்வியசாசி, தனஞ்சயன்.

## Thoughts for All

He who would govern his actions by the laws of virtue must regulate his thoughts by those of reason.

= Dr. Johnson

★ கனிந்த பேச்சில் கலகலப்பும் கலந்திருக்கும் ★



## விவேகாநந்த வெள்ளம்

பந்தத்தைவிட்டு விடுதலையை நாடுவது சன்மார்க்கம்
அச்சத்தைத் தவிர்த்தவன் வாழத்தெரிந்தவன்
நீரில் ஊறிய கடற்பஞ்சு மேலும் நீரை ஏற்பதில்லை
மதத்தை யுக்திபூர்வமாக விளக்குவது தர்சனம்
முடிவான நிலையை அடைவதற்குக் கிரியைகள் படிகள்
கிரியைகள் போன்று சின்னங்கள் புராணங்களும் படிகள்
மனம் இச்சா, கிரியா, ஞானசக்தி சொரூபமானது
உண்மைகளைத் தொகுத்து ஒன்றுபடுத்துவது தரிசனம்
அடிப்படை உண்மையை அறிதல் தத்துவதரிசன குறி
கடவுள் எம்மைத் தடுத்து ஆட்கொள்கின்றார்
கடவுள் எல்லார் உள்ளத்திலும் உறைகின்றார்
தேகம் இருக்கும்வரை சுகதுக்கங்கள் இருக்கும்
சாஸ்திரங்கள் அஞ்ஞானத்தை அகற்ற உதவுகின்றன
எல்லாம் எனக்குத்தெரியும் என்பவனுக்கு ஒன்றுந்
[தெரியாது

உன்னைப் பலவீனன் எனக்கருதுவது மகாபாவம்
தீமையை உண்டுபண்ணலாகாது அங்கீகரிக்கலாகாது
மெய்ப்பொருளை சத் என்று பெரியவர்கள் கூறுவர்
நாம் ஜீவர்களாய் உள்ளவரை எமக்கு ஈஸ்வரன் தேவை
வெறும் வாதங்களுக்கும் நாஸ்திகத்துக்கும் பேதமில்லை
சமயாசாரியர்கள் தந்தவையாவும் அருள்விருந்துகள்
நாமே பெருங் கோயில்கள் ஆகின்றோம்
புறக்கோயில்கள் யாவும் அகக்கோயிலின் நிழல்கள்
தெய்வத்தை அகத்தில் வைத்து வணங்குதல் மேலானது
முடிவான உண்மையைக் கிரகிப்பது சித்தாந்தம்
பேரும் பொருளும் புகழும் பெரும் பந்தபாசங்கள்

## மல்லாகம் விசுவநாதபிள்ளை கனகசபை

தமிழ் நூல்கள் பலவற்றை ஏட்டுருவிலிருந்து அச்சிற் பதிப்பித்த சாமிநாதஐயர் அவர்களுக்கும் தமிழ்த்தாதா தாமோதரம்பிள்ளை அவர்களுக்கும் ஏடுகள் பல உபகரித்தவர் சென்னை மாநிலத் தபால் அதிகாரி (Postmaster General) வி. கனகசபைப்பிள்ளை. இவர் யாழ்ப்பாணத்து மல்லாகத்தவர், இளைஞனாயிருந்தபோதே பட்டதாரியாகி (Boy Graduate) எனச் செல்லமாக அழைக்கப்பெற்றவர். தமிழர் 1800 ஆண்டுகளுக்குமுன் கண்ட நாகரிகத்தை ஆங்கிலத்தில் எழுதியவர். சென்னை மாநிலமெங்கும் தமிழபிவிருத்திக்கு ஊக்கமளித்தவர். அவர் இருந்த இடத்தை நாடித் தமிழ் ஏடுகளைப் பலர் கொண்டு சென்று கொடுத்தனர். அவர் ஏடு தேடியலைந்த ஐயர் அவர்களுக்குப் பெருவிருந்து கொடுத்து இருட்டடிப்பிலிருந்து தப்பி ஒளிவீசியவர். ஆறுமுகநாவலர், தாமோதரம்பிள்ளை, சபாபதி நாவலர் முதலான ஒளிமணிகள் ஒருகாலத்தில் இருட்டடிப்புச் செய்து கிரகணங்கள் கண்டவர்கள். ஐயரவர்கள் அறிவாளி, பெருந்தொண்டு புரிந்தவர், இருட்டடிப்பதில் இராகு கேதுகளையும் புறம் கண்டவர்.

கனகசபைப்பிள்ளையின் தந்தையார் விசுவநாதபிள்ளை அக்காலத்தில் கோமளேசுவரன் பேட்டையில் தங்கியிருந்து வின்சுலோ தொகுத்த ஆங்கிலத் தமிழகராதிப் பணியில் அமைதியான உதவிபுரிந்தவர். கனகசபைப்பிள்ளை 25–5–1855 ஆம் நாளில் தோன்றியவர். ஐயரவர்களும் அதே ஆண்டில் பூமியில் ஜனனமான உத்தமதானபுரத்து உத்தமோத்தமர். கனகசபைப்பிள்ளை சென்னை மாநிலமெங்கும் தபாற்கந்தோர்களைக் கண்டபோது தமிழறிஞர்களையும் கண்டு தமிழ்க்காதல் கொண்டவர். கனகசபைப்பிள்ளையின் அரிய தமிழ்த்தொண்டினைச் சுவைத்து அவரை வெகுவாகப் பாராட்டியவர் உயர் நீதிமன்றத்துச் சுப்பிரமணியஐயர் அவர்கள்.

கனகசபைப்பிள்ளையின் நூலைக் கருத்தூன்றிப் படித்த வரலாற்று நிபுணர் வின்சன்சிமித் என்பார் தென்னகம் என்னும் தமிழ் நாட்டுக்கும் தமிழருக்கும் பெருமதிப்புக் கொடுத்தார்.

சென்னைப் பல்கலைக்கழகமும் மதுரைத் தமிழ்ச் சங்கமும் கனகசபைப்பிள்ளைக்குப் பெருங் கௌரவமளித்து உறுப்பினராகவும் பரீட்சைப் பகுதியில் பெரியவராகவும் இருத்தினர். இத்தனை பணிகளுக்குமிடையில் கனகசபைப்பிள்ளை தம்முடைய உத்தியோக கடமைகளை நன்கு செய்தமையை ஆங்கிலேயர் வெகுவாகப் பாராட்டியுள்ளார்கள். அன்று 1906 ஆம் ஆண்டுச் சிவராத்திரி நாளில் காஞ்சிபுரத்தில் அதாவது பிருதிவித்தலமாய புனித பூமியில் கனகசபைப்பிள்ளை பூதவுடலை நீத்துப் புகழுடம்பு பெற்றார்.

## வெண்நொச்சி

ஏதும் பெருவிடின் பச்சிலையுண்டு இறைவனுக்குச் சாத்த என்பர் திருமுறையாசிரியர்கள். பச்சிலைகளுள் நொச்சி சாதாரணமானது. நொச்சியில் வெண்நொச்சி கருநொச்சி என இரண்டுண்டு. வெண்நொச்சி, மகவீன்ற தாய்க்கு நீராட்டப் பயன்படுவது. பழைய மருத்துவமாதர், பாவட்டை, நொச்சி, ஆமணக்கு முதலிய பச்சிலைகளை அவித்து அந்நீரில் தாயை நீராட்டி உடல்நோ தீர்ப்பது வழக்கம்.

வெண்நொச்சியை துப்புரவாகக் கசாயமிட்டு வடித்துப் பருகினால் குளிர்சுரம், முறைக்காய்ச்சல் குணமாகும். வாதம் வந்தவர்கள் இதனால் ஒத்தணம் பிடித்தால் சுகம் தெரியும். நொச்சியிலையையும் வெண்மணலையும் நன்றாகச் சூடுபட வறுத்து ஒத்தணம் பிடிக்கத் தலைவலி நீங்கும்.

★ மக்கட் பணியே வாழ்வு எனக் கருதுதல் மாண்பு ★

# அருள் விருந்து

(ஆதாரம் – தர்மசக்கரம்)

ஆசை வீழ்ச்சிக்கு முன் அறிகுறியாகும்
பகுத்தறிவிலும் வல்லது விசுவாசம்
நூலறிவிலும் மிக்கது நுண்ணறிவு
தியாகம் ஒன்றே இறைவனுக்கு உகந்தது
பொதுநல சேவையில் பணிவு இருத்தல் வேண்டும்
சீலமும் சூழ்நிலையும் மனிதனை மேலோனாக்கும்
தன்னையும் தன் தரத்தையும் அறிவிப்பது உழைப்பு
அருள் தாகமுண்டானால் நலன்கள் தாமாக வரும்
தெய்விகம் எல்லோருக்கும் சொந்தமானது
மேன்மைக்கும் கீழ்மைக்கும் மனப்பான்மை முகாமை
ஆனந்தம் திருப்தி தூய்மை கலையை வளர்க்கும்
சத்தியமும் பரஸ்பர நட்பும் பெருநெறியெனப்படும்
ஆசைக்கு அடிமையாவது மிகக் கொடிய பாவம்
செல்வத்தைப் பயன்படுத்தும்போது பண்பு வெளியாகிறது
அறச் செயல்கள் தெய்விகத்தை நினைவுபடுத்தும்
உள்ளம் இறைவனுக்குச் சிம்மாசனம்
பணிவிடை செய்தல் பெரும் பாக்கியம்
கடமையைச் செய்தல் தேவ ஆராதனையாகும்
பேச்சை வெல்ல வல்லது மௌனம்
மனத் தூய்மைக்கு நிகரான வலிமை கிடையாது
பொறுமை, வாய்மை, அமைதி, பணிவு பண்பாடாகும்
பக்தியிருந்தால் உலகப்பற்று ஒட்டாது

## சத்தியமூர்த்தி தரிசனம்

சேர் இராமநாதன் நினைவுச் சொற்பொழிவுகள் நிகழ்த்திய பெரியவர்களுள் முன்னோடிகளுள் முதல்வர் சத்தியமூர்த்தியாவர். அவரை வீரர் என்பதா, தீரர் என்பதா, தியாகி என்பதா என்று சொல்லமுடியாத நிலையில் அவர் மூன்றாயும் இருந்தவர். அழகிய வெள்ளைக் கதர் தொப்பி, திருநீறு, சந்தனம் அகன்ற நெற்றியை அலங்கரிப்ப, அழகிய மூக்கும் அதற்கேற்ற கண்ணாடியும், மலரிதழ் போன்ற உதடுகளில் வெற்றிலைச் சிவப்பு, கையில் வெள்ளிப் பூண்இட்ட பிரம்பு, கதர்த் துணியில் நீள் சட்டை, சால்வை, கொடுக்குடன்கூடிய வேட்டிக் கட்டு, மெல்லிய செருப்பு, சத்தம் கேளாத நடை. பூமாலை அணிந்தால் கௌரவமாக அதைச் சுமந்துகொள்ளும் பெருந்தன்மை. வாசனைப் பொருள்களில் விருப்பம். அழகிய குத்துவிளக்குப்போன்ற அங்கலட்சணங்கள் அமைந்த அருந்தவப்புதல்வியோடு 1934ஆம் ஆண்டில் பரமேஸ்வராக் கல்லூரியில் ஆயிரவர் கேட்டின்புற ஆடாமல் அசையாமல் நின்று அருமையான ஆங்கிலத்தில் மணிக்கணக்காகப் பேசினர்.

அந்தக் காலத்திலே பாரத நாட்டிலே அதாவது இந்தியாவிலே காங்கிரஸ் வளர்ச்சிக்கும் சுதந்திர தாகப் பரம்பலுக்கும் சத்தியமூர்த்தியின் மேடைப் பேச்சு பெருமளவில் வேலை செய்தது. ஆவடி என்னும் இடத்தில் அவர் காங்கிரஸ் தலைவராயிருந்தமை காரணமாக அவ்விடம் சத்தியமூர்த்தி நகரம் என வழங்குகிறது. சிறையில் தவஞ் செய்தும், வெளியில் கடுமையாக உழைத்தும், சுதந்திர தாகத்தால் அவருக்குண்டான நோய் நித்திரையின்மை. கஷ்டப்பட்டு இரண்டுமணி நேரம் தூங்குவதே அருமை என்பர். வாதப் பிரதிவாதமாயினும், சபையறிந்து சொற் சோர்வுபடாமல் சாதுரியமாக ஆங்கிலேயரின் பல்லையுடைக்குமாப்போல் பேச வல்லவர் அவர். இவ்வளவு வீரத்துள்ளும் தமிழிசை என்றால் உருகிவிடுவார். ஒருசமயம் சிறைக் கூடத்தில் சுந்தராம்பாள் கச்சேரியை ஒழுங்கு செய்வதற்கு முயற்சியும் எடுத்தவர்.

முற்றொடர்:


## ஒருவரிப் பழமொழி

161. முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்
162. முன்கை நீட்டினால் முழங்கை நீளும்
163. மூக்குள்ள மட்டும் சளியும் உண்டு
164. வண்டிக்குப் பாரம் பூமியிலே
165. வளரும் காயைப் பிஞ்சிலே தெரியும்
166. வறுத்த ஓட்டை நக்கினால் வாயெல்லாம் கரி
167. விருந்தும் மருந்தும் மூன்று நாள்
168. விரும்ப விரும்ப வேம்பும் கரும்பு
169. வெள்ளை கொடுக்க வினை தீரும்
170. வேப்பெண்ணெய் விற்ற காசு கசக்காது
171. கடுஞ் செட்டு தயவைக் கெடுக்கும்
172. கட்டின வீட்டுக்கு எட்டு வக்கணை
173. கணக்கைப் பார்த்தால் பிணக்கு வரும்
174. கண்ணின் குற்றம் கண்ணுக்குத் தெரியாது
175. கலகம் பிறந்தால் நியாயம் பிறக்கும்
176. கழுதையறியாது கரும்பின் ருசியை
177. கனமழை பெய்தாலும் கருங்கல் கரையாது
178. கனவிற்கண்ட பணம் செலவுக்கு உதவாது
179. காடு வெட்டிக்கு கம்பு வெட்டப் பயமில்லை
180. காலம் போகும் வார்த்தை நிற்கும்

## நரித்தந்திரம்

தந்திரம் உள்ள நரி காட்டை விட்டுக் கிராமப்புறஞ் சென்றது. அங்கே உணவு தேடியபோது, கோழிப் பண்ணையில் ஒரு சேவலைப் பிடித்தது. பிடித்த சேவலை வாயிற் கௌவியவாறு ஓடியபோது, சேவல் கத்தியது. பண்ணைக்காரர் தடிகளை எடுத்துக்கொண்டு வந்து, நரியைக் கலைத்துக்கொண்டு ஓடினார்கள். நரி ஓடியபோது சேவல், நரியாரே நரியாரே நீர் பண்ணையாளரிடம் ''என்னைப் பிடிக்க முடியாது'' என்று சொல்லும் அவர்கள் திரும்பிப் போய்விடுவார்கள் என்றது. நரி மெய்தான் என்று நம்பி, வாயைத் திறந்து வந்த வழியைத் திரும்பிப் பார்த்து, ''என்னைப் பிடிக்க முடியாது'' என்று கூறியது. உடனே சேவல் அதன் பிடியிலிருந்து தப்பியோடி மரத்தில் ஏறியது. பின் தொடர்ந்து வந்தவர்கள் தடியால் எறிந்து நரியை வீழ்த்திக் கொன்றனர்.

★ சிறு சிறு பூச்செடி சிந்தையைக் கவரும் ★



## பஞ்சதந்திரம்

பெண், பிராமணன், சந்நியாசி, குழந்தை ஆகியோர்களை ஒரு பொழுதும் கொல்லலாகாது என்பது எல்லோருக்கும் அமைந்த பொதுவிதி.

உயிர்போகும் நிலை வந்தாலும் எவரும் எவருக்கும் நம்பிக்கைத் துரோகம் செய்தலாகாது. உயிர் போகும் நிலை வந்தாலும் செய்யத்தகாததைச் செய்யக்கூடாது. செய்யத்தக்கதை விடக்கூடாது. இதுவே நல்லோர்களின் தருமம்.

சிலருடைய மனத்திலுள்ளது நாக்கில் வருவதில்லை. நாக்கில் உள்ளது வெளியில் வருவதில்லை. எதைச் சொல்லுகிறார்களோ அதைச் செய்வதில்லை. இவர்கள் விசித்திரமானவர்கள். இவர்களை நம்புதலாகாது.

கொடூரத்தில் அன்பையும், கடினத்தில் மிருதுத் தன்மையும், ரஸமற்றதில் ரஸத்தையும் வாலிபர்கள் இளம் பெண்களிடம் கற்பனை செய்கின்றனர்.

கேட்கத்தக்கவர்களையும், நன்மை செய்பவர்களையும், குருவையும் எவன் கலந்து காரியம் செய்கிறானோ அவனுக்கு எவ்விதமான காரியத்திலும் ஒரு தடங்கலும் நேரிடாது.

யோசனை சொல்லத் தகாதவர்களுக்கு யோசனைகள் சொல்லலாகாது. குரங்குக்கு யோசனை கூறிய தூக்கணாங் குருவி கூட்டையிழந்து படாதபாடு பட்டது.

பசுக்களிடமிருந்து அமுதமயமான உணவையும் பிராமணரிடமிருந்து அருமையான தவத்தையும் எதிர் பார்த்தல் வேண்டும்.

## இப்பில் இப்பில்

வரட்சியைத் தாங்கி வளமில்லாத மண்ணில் வளர்ந்து பயன்தரக்கூடிய மற்றொரு மரம் இப்பில் இப்பில். இந்த இப்பில் இப்பில் மரத்தில் இராட்சத இனம் என்னும் பெரிதாக வளரும் இனமே நெடுந்தீவுக்குரிய தாகும் என்பது மில்க்வைற் தொழிலதிபரின் கருத்து. எனவே இவர் அன்று நெடுந்தீவுக்குச் சென்றபோது, பெருந்தொகையான விதைகளை எடுத்துச் சென்று விநியோகஞ் செய்தார். இதனை முன்னரே அறிந்து அநுபவம்வாய்ந்த பெண்கள் சிலர் இதனைச் "சுடு தண்ணீர்க் கிளுவை" என வழங்கினார்கள். நெடுந்தீவெங்கும் இப்பில் இப்பில் உண்டாவதாக.

## மாசி மகநாள் நினைவு

மாசி மாதத்து மக நட்சத்திரம் தனிச் சிறப்பு வாய்ந்தது. மாமாங்கமாடி, மாசிக்கடலாடி என்றெல்லாம் மாமாங்கத் திருவிழாவை நாட்டார் பாடல்கள் நன்கு சுவைத்தன. தமிழ்நாட்டில் குடமூக்கு என்னும் கும்பகோணத் திருப்பதியில் மாசி மகத் திருவிழா பெருந்திரளான மக்கள் கண்டு மகிழ நடைபெறும். அன்று சைவப் பெரியார் சாமிநாத பண்டிதர் பேசுவதைக் கேட்பதற்குப் பல்லாயிரவர் கூடுவர். ஒலிபெருக்கி என்றால் என்ன என்று எவருமறியாத அக்காலத்திலே பல்லாயிரவர் காதுகளில் கணீர் கணீர் என்று பேசிச் சைவப் பிரசாரஞ் செய்தவர் கந்தமடம் சுவாமிநாத பண்டிதர் என்னும் தம்பையா உபாத்தியாயர் ஆவார். அவர் தென்னாடெங்கும் சுற்றிச் சைவப் பிரசாரம் செய்ய ஒழுங்கு செய்தவர்கள் நகரத்தார் என்னும் பெரு வணிகரான செட்டிமார்களாவர். காசியில் வணிகம் செய்த செட்டிமார் ஒரு சமயம் நாவலரவர்களின் மருகர் வித்துவசிரோமணி பொன்னம்பலப்பிள்ளை அவர்களை அங்கழைத்துப் பேசுவிக்கமுயன்றபோது, அவர் தமது உடல் நலமின்மையால் தமக்குப் பதிலாக தம் மாணாக்கர் சாமிநாத பண்டிதரை அனுப்ப, இவர் பேசக் கேட்டு மகிழ்ந்த செட்டிமார், இவரைத் தமிழ்நாட்டுக்கு அழைத்துப் பெருமைப்படுத்தத் தமிழ்நாடெங்கும் சைவம் ஒலித்தது. சைவ வித்தியானுபாலன அச்சகம் நிறுவி அருமையான சிவப்பணிபுரிந்த சாமிநாதபண்டிதர் திருச்செந்தூர், சிதம்பரம் முதலான தலங்கள்தோறும் சைவப் பிரகாச வித்தியாசாலைகள் நிறுவினர். தேவாரத் தொகுதிகளை அடங்கன்முறை எனத் தலவரலாறு தவறாமல் சுத்தமாகப் பதிப்பித்தவர். சிவஞானபாடியத்தை முதலில் வெளியிட்டவர். திருக்கோவையார் உண்மை முதலிய நூல்கள் எழுதியதோடு வேதாகம உண்மையை ஆராய்ந்து நிலைநாட்டியவர். காசிவாசி செந்திநாத ஐயர் அவர்களின் நூல்களையெல்லாம் விலை கொடுத்து வாங்கிப் பதிப்பிக்க வைத்திருந்தவர். அருட்பா என்றால் ஆறிருதிருமுறைகளே என்று நீதி மன்றத்தில் கதிரைவேற்பிள்ளை, திரு வி. க. முதலானோரின் சாட்சியோடு நிரூபித்து வென்ற வைபவத்தை விழாவாகக் கொண்டாடியவர் சாமிநாத பண்டிதர். வேதாகமத்தை ஏற்காதவர்களைக் கண்டால் விரோதி, துரோகி என்று கூச்சலிட்டுக் கத்தித் துரத்தியவர். அவர் 1934ஆம் ஆண்டில் மறைந்தபோது பண்டிதமணி அவர்கள் பாடிய கையறுநிலை முந்நூறு அடிகளுக்கு மேற்பட்டது.

தருமபுரவாதீனத்து வெளியீடுகள் யாவும் சாமிநாத பண்டிதர் பார்த்த பின்பே அச்சில் வந்தன. வித்வசிரோமணி என மகா சந்நிதானங்கள் கொண்டாடத் தமிழ்நாடே தம் நாடாக இவர் அங்கே வாழ்ந்திருந்தவர்.

## மனிதரைத் தாக்கும் துன்பங்கள்

எமது வாழ்நாளில் நம்மைத்தாக்கும் துன்பங்களின் வரிசை பெரிது.

நோய், கடன், பதவியாசை, சத்துருபயம், மூவாசை முதலியன நம்மைத் தாக்குகின்றன.

★ வேற்றுமை மனப்பான்மை பக்தர்களிடம் கிடையாது ★




## பகவத் கீதை

இராச்சியத்தின் ஆசையால் விவேகத்தை விடலாகாது. உலோப குணம் உள்ளவர்கள் அரசாளவியலாது. உலோப குணத்தால் குலநாசம் உண்டாகும். மித்திரத் துரோகம் உண்டாகும். குலநாசத்தால் பாரம்பரியப் பண்பாடு அழியும். பண்பாடு அழிந்தால் அனுசாரம் தலையெடுக்கும். அனுசாரம் தலையெடுத்தால் மாதர் கற்புக் கெடும். சுத்த வீரனுக்கு அச்சம் என்பது தெரியாது.

பொறுத்துப் புனிதத்தை அடைவதே புண்ணியங்களுள் சிறந்த புண்ணியம். உலகம் அழியினும் உயிர் அழியாது. இல்லாததொன்று இல்லை. உள்ளது போகாது. ஆன்மா சுகத்துக்கும், துக்கத்துக்கும் அழிதலுக்கும் அப்பாற்பட்டது. இவன் அவனைக் கொன்றான் என்றும், அவன் இவனைக் கொன்றான் என்பதும் நித்தியமான ஆன்மாவுக்கு ஒன்றும் நிகழ்வதில்லை. ஆன்மா பிறப்பு, இறப்பு, வளர்த்தல், திரிதல், குறுகுதல், நசிதல் முதலியவற்றில் சம்பந்தப்படமாட்டாது. அது தான் வசிக்கும் உடல் அழிந்தாலும் தான் அழியாதது. ஆன்மா பெரியதில் பெரியது, சிறியதிற் சிறியது, அருவுருவானது, அதனை ஆயுதத்தால் அழிக்க முடியாது, அக்கினியால் தகிக்கமுடியாது, நீரினால், வாயுவினால் ஒன்றுஞ் செய்ய முடியாது.

## நவமணிகள்

இந்துநாகரிகத்தில் ஒன்பது ஒன்பதாகக் கூடியுள்ள பெரியவர்கள், கிரகங்கள், மணிகள், தானியங்கள் என்பன யாவும் ஏற்றமுள்ளவை. நவமணிகள் என்னும் கூடத்தில் ஒன்பது பெரும் புலவர்கள் முன்னர் விக்கிரமாதித்தன் பேரவையைச் சிறப்பித்துள்ளார்கள். பின்னர் எழுந்த, ஒன்பதாம் சைவத் திருமுறையில் ஒன்பது அநுபூதிமான்கள் ஒன்றுகூடியுள்ளார்கள். நவமணிகள் என்னும் தொகுப்பில் ஒன்பது இரத்தினங்கள் உள்ளன. இவை வைரம், முத்து, மரகதம், மாணிக்கம், நீலம், புஷ்பராகம், வைடூரியம், கோமேதகம், பவளம் என்பனவாகும். இவை அழகுக்கு அழகு செய்யும் அணிமணிகளாயிருப்பதோடு, மந்திரம், பூசை, வைத்தியம் முதலிய துறைகளிலும் பெரிதும் பயன்தருவனவாகும். இலங்கை மணித் திருநாடு எனப் புகழ்பெற்றது. மாவலிகங்கை மணிகளை உருட்டி வந்து உபகரிக்கும் பேராறு. ''மணி கொணர்ந்து மணி விளக்கேற்றிடும் மாவலிகங்கை'' என்பது பாடல்.

## ஆந்தையிடம் அறிவு பெற்ற பாரசீகமன்னன்

ஆதாரம்: ஆ. முத்துத்தம்பிப்பிள்ளை
மூன்றாம் பாலபாடம்

முன்னாளில் பாரசீகம் என வழங்கிய நாடு இன்று ஈரான் என வழங்குகிறது. முன்னொருகாலத்தில் பாரசீகத்தை ஆண்ட மன்னன் அயல்நாடுகளைத் தாக்கிப் பெரிய அழிவு செய்து வந்தார்.

ஒரு நாள் இரவு அவர் பல்லக்கிலேறி நகரில் ஒரு பகுதியைச் சுற்றிப் பார்த்து வந்தார். அங்கே ஒரு பாழடைந்த வீட்டில் இரண்டு ஆந்தைகள் சப்தம் போட்டு விளையாடிக்கொண்டிருந்தன. அரசன் அந்த இடத்தைக் குறிப்பாகக் கவனித்து மறுநாள் தன் மந்திரியிடம், அந்தப் பாழடைந்த மனையில் ஆந்தைகள் பேசிக்கொண்டிருந்த விடயம் என்னவாய் இருக்கலாம் என்று கேட்டார்.

மந்திரியார் ''அரசர் அவர்களே! எதனையும் நான் நேரிற் கேட்டு வந்தாலன்றி உள்ளதைக் கூறமுடியாது'' என்றார். அடுத்தநாள் மன்னர் மந்திரியை அழைத்து ஆந்தைகள் பேசியதை அறிந்தீரா என்று கேட்டார்.

''ஆம் அரசே! அவை இரண்டும் தங்கள் ஆண் குஞ்சுக்கும் பெண் குஞ்சுக்கும் கலியாணம் பேசிக்கொண்டிருந்தன. ஆண் பக்கத்து ஆந்தை சீதனமாக ஐம்பது பாழ்மனைகளும் ஐம்பது குட்டிச் சுவர்களும் கேட்டது. அதற்குப் பெண் பக்கத்து ஆந்தை ''நல்லது! இவை முன்னர் ஆண்ட அரசர் காலத்தில் கிடையா. ஆனால் இன்றைய எங்கள் மன்னர் காலத்தில் பெருமளவில் கிடைக்கும் சீதனம் தரலாம்'' என்று ஒப்புக்கொண்டது என்றார்.

## சங்கத்தமிழ் நூல்கள்

சங்கத்தமிழ் நூல்கள் பழந்தமிழ் நாட்டையும் அன்றைய தமிழ்ப் பெருங்குடியினரின் வாழ்வையும் அவர் தம் பாரம்பரியப் பண்பாட்டினையும், அன்னாரின் முதுபெரும் நாகரிக மேன்மையையும், அவர்கள் கொண்ட உயர் சைவ நெறியையும் எடுத்து விளக்கும் இனிய இலக்கியச் செல்வங்களாம். அவை அறிவு, உணர்வு, செயல், சொல் என்பவற்றைச் செம்மை செய்து விளக்குவதோடு, வாழ்வின் அடிநிலை உண்மையையும் முடிநிலைக் குறிக்கோளையும் எடுத்துக்காட்டி விளக்குவனவாம். அவை பழந்தமிழரின் கவிதை ஊற்று. அவர்தம் பேரறிவுப் பெருங்களஞ்சியம். வாய்த்த வாழ்வின் வகையான விமர்சனம்.

## சங்குகளின் பெயர்களும் உரியவர்களும்

| | | |
|---|---|---|
| பாஞ்சஜன்னியம் | = | கண்ணன் |
| தேவதத்தம் | = | அருச்சுனன் |
| பௌண்டா | = | பீமன் |
| அனந்தவிஜயம் | = | தருமர் |
| சுகோசம் | = | நகுலன் |
| மணிபுஷ்பகம் | = | சகாதேவன் |

★ அகத்தில் இருப்பது என்றும் பாதுகாப்பானதாகும் ★

## கடவுட் கொடை

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களுக்குக் கலாநிதிப் பட்டம் வழங்குவதற்கு முன், சாகித்திய மண்டலம் உயர் உறுப்பினர் என்னும் "பெலோசிப்" வழங்கியது. பெலோசிப் தகுதியைப் பெறுவதற்குப் பண்டிதமணி பதினறு ஆண்டுகளுக்கு முன் தயங்கினர். அவரின் தயக்கத்துக்குக் காரணம் தமக்குச் சில மாதங்கள் இலக்கண விளக்கச் சூறுவளி, பிரயோக விவேகம், தருக்க சங்கிரகம் 1924ஆம் ஆண்டளவில் சொல்லிக் கொடுத்த மூதறிஞர் வித்துவான் சுப்பையாபிள்ளை இருப்பத் தான் வாலாட்டுவதற்கு விரும்பவில்லை என்று சொன்னர். எனவே அந்த ஆண்டிலேயே சுப்பையாபிள்ளைக்கு உறுப்பினர் பட்டம் வழங்கியபின் அடுத்த ஆண்டில் தாம் பட்டத்தை ஏற்றுக்கொண்டார்.

பண்டிதமணி அவர்கள் 1942ஆம் ஆண்டுக்கு முன்னர் கம்பராமாயண ரசனையில் வெகுவாக ஈடுபட்டு மாணுக்கர் பரம்பரையினரை இராமாயணப் பித்தர்களாக்கியவர். ஆனல் 1942ஆம் ஆண்டளவில் கந்தபுராணத்தில் வெகுவாக ஈடுபட்டுப் பெரும் பக்தராகிப் பலரைக் கந்தபுராணப் பக்தர்களாக்கியவர். கந்தபுராணத்தில் ஈடுபாடுகொண்டதன் பயனுக எழுந்தது தட்சகாண்ட உரை. அது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பெருவிழாக் கண்டு ஆனைமேல் உலா வந்தது. அதன் பின் கம்பராமாயண ரசனைக் குறிப்புக்கள் தமக்குத் தேவையில்லையெனத் தீர்மானித்துப் பெரிய இடத்திலே அதைச் சேரவைத்தவர். பேராசிரியர், சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை அதனை உவந்தேற்று நன்றிக் கடிதத்தில் "இது கடவுட் கொடை" எனப் பாராட்டினர்.

## சௌனக முனிவர்

பிருகு முனிவரும் புலோமசை என்பாளும் இல்லறம் நடத்திப் பெற்ற தவப்புதல்வர் சௌனகர். இளமையிலேயே கடுந்தவஞ்செய்து கறையான் புற்றுல் மூடப்பட்டுக் கிடந்தவர். அவரின் கண்ணெளி புற்றின் வழியாகப் பிரகாசித்தன. அன்று வேட்டைக்குச் சென்ற யயாதி மன்னனின் மகள் சுகன்னி என்பாள் வெளிச்சம் வந்த துவாரத்தில் தடியால் குற்றியபோது முனிவரின் கண்களிற் பட்டுவிடவே அவர் சாபமிட வேட்டைக்குச் சென்றவர்களுள் மன்னனும் மந்திரியும் நீங்கலாக மற்றையவர் குருடராயினர்.

நிலைமையை அறிந்த யயாதி முனிவரிடம் மன்னிப்புக் கோரி மகளை அவருக்கு மணம் செய்துகொடுத்தான். சுகன்னி முனிவருக்குப் பணிவிடை செய்தநாளில் அஸ்வினி தேவர் அவளைக்கண்டு அவளின் கற்பின் திறமையைச் சோதிப்பதற்குத் தங்களில் ஒருவரை மணஞ்செய்யுமாறு கேட்டார்கள். அவள் தன் கணவனிடம் விபரத்தைக் கூறினதும் அவர் ஞானக்கண்ணுல் உணர்ந்து அவர்கள் கோரிக்கைக்கு இணங்குமாறு மனைவியிடம் கூறி, ஒரு பரீட்சை செய்வதற்கு ஒழுங்கு செய்தார். அதன்படி அஸ்வனி தேவர்கள் இருவரும் முனிவரும், மூவருமாக ஒரு சுனையில் மூழ்கி எழும்பினர்கள். மூவரும் ஒரேமாதிரியான உருவம் உள்ளவர்களாய் நின்றர்கள். அப்போது சுகன்னி கணவனை மனத்தால் நினைத்தவாறு தன் கணவன் இவர்தான் என்று உண்மையான கணவனைத் தொட்டாள். அஸ்வினி தேவர் அவளை வாழ்த்தினர்.

## ஆருத்திரா தரிசனம்

அண்டத்திலும் பிண்டத்திலும் அணுவின் அசைவு அளப்பரிய விளையாடல்களைச் செய்கிறது. இந்தத் தத்துவ நுட்பத்தைப் பண்டைக் காலத்துப் பட்டி தொட்டிகளில் வாழ்ந்த தமிழரும் நன்குணர்ந்தனர். நடராசப் பெருமானின் ஆடலின் அசைவில் அவர்கள் ஆனந்தங் கொண்டனர். அதிகாலையில் மூன்று மணிக்கே நீராடிப் புனிதராய் ஆலயம் புகுந்த ஆசாரம் அகத் தூய்மைக்கும் புறத்தூய்மைக்கும் ஆதாரம்.

இன்று இலங்கையில் வாழும் தமிழர் பலர் இடம் பெயர்ந்து காடு மேடுகளில் கஷ்டப்பட்டும் வாழ்கின்றர்கள். மன்னரிலிருந்து வவுனியா போகும் வழியிலும், மன்னரிலிருந்து பூநகரி போகும் வழியிலும் பலர் தமக்கென நிரந்தரமான கொட்டில்கள் குடில்கள் இல்லாத நிலையிலும் இறைவனுக்குச் சிறுசிறு குடில்கள் அமைத்து மாவிலை தோரணம் தூக்கித் திருவெம்பாவை உற்சவம் நடத்துகிறர்கள். பண்டைத் தமிழர் பண்பாட்டினைப் பட்டனங்களிற் பார்க்கப் பட்டி தொட்டிகளில் பார்க்கக் கூடியதாயுள்ளது. படித்தவர்களிற் பார்க்கப் பாமர மக்களே பக்தி நெறியில் சைவ நெறியில் பரக்கப் பரக்கப் பழகியொழுகுகிறர்கள். இத்தகைய ஒழுங்குகளுக்கு திருப்பள்ளி எழுச்சி, திருவெம்பாவை ஆகிய பாடல்களைக் கையடக்கமாகப் பதித்து இலவசமாக ஆயிரக் கணக்கில் விநியோகித்து வரும் மில்க்வைற் தொழிலதிபருக்கு நல்ல பாராட்டுக் கிடைத்துள்ளது.

## ஒப்பனைக்கு இத்தனையும் பயன் தந்தன

பண்டைத் தமிழ் நாகரிகத்தில் பெண்கள் தங்கள் கூந்தலிலே மிகுந்த கவனஞ் செலுத்தி வந்தார்கள். அதைக் கோதி முடிப்பதில்தான் எத்தனை ஒப்பனைகள். இந்த ஒப்பனைக்குத்தான் எத்தனை ஓமாலிகைகள். உலகத்தைத் துறந்த பெரிய முனிவர் இளங்கோ, அவர் தமிழ்மயமான நாகரிகத்தை முனியவில்லை, வெறுக்கவில்லை. காமம் பயக்கும் என்று பெண்களைக் கண்டால் கண்டு முட்டுச் சொல்லவில்லை. கேட்டால் கேட்டு முட்டுச் சொல்லவில்லை. கண்டும், கேட்டும் நாகரிகச் சிறப்பை மாதவியின் கூந்தல் வளத்திலும் வடிவிலும் சொல்லுகிறர்.

அத்தி, இத்தி, ஆல், அரசு, மா முதலிய பத்துத் துவர்கள். அகில், சந்தனம், கோட்டம், துருக்கம் முதலிய விரைகள். இலவங்கம், கருந்தாது, இலாமிச்சை முதலிய ஓமாலிகைகளைக் கூட்டி என்ன என்னமோவெல்லாம் செய்து முடித்த கூந்தல்.

### மனித அவஸ்த்தை

பிறவியெடுத்த நமக்கு நம்மையறியாமலே பசி, தாகம், மோகம், சோகம், மூப்பு, இறப்பு என்னும் அவஸ்த்தை உண்டாகின்றன.

★ அச்சம் ஆத்மசாதனத்துக்கு உதவாதது ★



# DHAMMAPADA

As from a heap of flowers many fair garlands may be made, so by one living mortal many good deeds should be done.

As the bee takes the honey from the flower, leaving colour and fragrance uninjured, so let the sage go about in a population.

## சைக்கிள் வண்டி

நம்மவர் வாழ்வில் இன்று கைகொடுக்கும் வாகனங் களுள் சைக்கிள் வண்டி தலைமைதாங்குகிறது. பெரியவர் கள் பலர் தங்கள் ஆடம்பரக் கார்களை விட்டுச் சைக் கிள் பாரிலும், கரியரிலும் இருந்து போகின்றார்கள். பெரிய வீட்டுப் பெண்களும் சைக்கிளைத் தஞ்சமடைந் துள்ளார்கள். ஒரு குடும்பமே சைக்கிளில் ஏறிப்போவதும் உண்டு. சர்வசாதாரணமாகத் தந்தை, தாய், பிள்ளைகள் இருவர் சவாரி போவதை எங்கும் காணலாம். ஒவ் வொரு கல்லூரியிலும் ஆயிரக் கணக்கான சைக்கிள் வண்டிகள் அணியணியாக வந்து போகின்றன. மாணாக் கியர் பல்லாயிரவர் சைக்கிள் ஓட்டம் வல்லவராயுள்ளார் கள்.

பழைய காலத்துப் பெரியவர்கள் சிலர் சைக்கிள் ஓடப் பழகியிருந்தார்கள். அவர்கள் சைக்கிள் ஓடினார் களா என்று ஆச்சரியப்படவேண்டியும் இருக்கிறது.

மகாத்மா காந்தியடிகள் சைக்கிள் ஓடுவதில் சமர்த் தர். அவர் ஆபிரிக்காவில் அதிகமாகச் சைக்கிள் ஓடியவர். இந்தியாவில் ஆச்சிரம வாழ்வில் ஒரு நாள் ஓடியபோது எல்லோரும் ஆச்சரியப்பட்டார்கள்.

எங்கள் மத்தியில் இன்று முதுபெரும் கிழவனாரா யுள்ள பண்டிதமணி அவர்கள் வேகமாகச் சைக்கிள் ஓடுவார். அவர் தமது பன்னிரண்டாம் பதின்மூன்றும் ஆண்டுப் பராயத்திலேயே சைக்கிள் ஓட்டம் பயின்றவர்.

## தமிழ் மாணாக்கன்

தமிழ் பயிலும் எல்லோரும் தமிழ் மாணாக்கர்கள். ஆனால் கனடாவில் பிறந்து, இங்கிலாந்தில் மறைந்த ஒருவர் தம்மைத் தமிழ் மாணாக்கன் என வழங்கித் தமது கல்லறையிலும் அவ்வாறே எழுதச் சொன்னவர். அவர் தமிழ் நாட்டுக்குப் பாதிரியாராய் வந்து தமிழ் மக்களிடம் பழகியபோது திருவாசகம், திருக்குறள், புறப்பொருள் வெண்பா மாலை, புறநானூறு, திருவருட்பயன் முதலிய நூல்களின் அருமை பெருமைகளை அறிந்து, அவற்றை மூலத்திலேயே படித்தின்புறவேண்டும் என்னும் அபிலாசை யால், தமிழ் மொழியை முறையாகக் கற்று, இலக் கணம் கைவந்து, இலக்கணத்தில் நூலும் எழுதியதோடு திருவாசகத்தையும், திருக்குறளையும் ஆங்கிலத்தில் அருமையாக மொழிபெயர்த்தவர். தமிழில் ஏட்டுருவில் கிடந்த சில நூல்களை ஒப்புநோக்கிப் பிழையறப் பரி சோதித்து அச்சுவாகனம் ஏற்றியவர். தமது கல்லறை அமைப்பில் தமிழ் நாட்டவரும் பங்குபெறவேண்டும் என அவர் கேட்டுக்கொண்ட வண்ணம் தமிழ்நாட்டார் தம்மிடையே பணம் சேர்த்து அவருடைய கல்லறைக் கட்டடச் செலவுக்கு அனுப்பினார்கள்.

## செந்தமிழுக்குச் சேதுப்பிள்ளை

சொல்லின் செல்வர் சேதுப்பிள்ளை அவர்களைச் சுத்தானந்த பாரதியார் ''செந்தமிழுக்குச் சேதுப் பிள்ளை'' என்று சுவையாகப் பாராட்டியுள்ளார். அவர் பல்கலைக்கழகங்களாலும், தமிழ் வளர்ச்சிக் கழகங் களினாலும் பரிசுகள், பட்டுகள், பாராட்டுகள், கேடகங் கள், சிறப்புக்கள் வழங்கப் பெற்றவர். அவரை, ''முத் தமிழ்க் கடலில் முத்துக்குளித்தவர்'' என்றும் வழங்கினர்.

சேதுப்பிள்ளை அவர்கள் செய்த நூல்களின் பட்டியல் பெரிது. திருவள்ளுவர் நூல்நயம், சிலப்பதிகார விளக்கம், தமிழ்நாட்டு நவமணிகள், தமிழக ஊரும் பேரும், தமிழர் வீரம், தமிழ் இன்பம், தமிழ் விருந்து, வழிவழி வள்ளு வர், வீரமாநகர், வேலும் வில்லும், கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர், கடற்கரையிலே, கால்ட் வெல்ட் ஐயர் சரிதம், ஆற்றங்கரையினிலே.

பிள்ளை அவர்கள் எழுதிய முதல் நூல் திருவள்ளுவர் நூல்நயம். அதில் அவர் ஒரு தமிழ்த் தொடரை இலகு வாக்குவதற்காகப் பிரித்து எழுதியமை எதிர்க் கருத்தைக் கொடுத்ததோடு ஈழத்தில் பெருஞ் செல்வாக்குப் பெற் றுத் தலையெடுத்த பண்டிதர் ஒருவரின் பலத்த கண்டனத் தையும் கண்டது.

''நான்முகற் பயந்த'' என வரவேண்டிய தொடரை ''நான்முகன் பயந்த'' என எழுதியமை தப்பு. பிரம தேவனைப் பெற்ற என்னும் கருத்து, பிரமதேவன் பெற்றெடுத்த என வருமானால் பிழைதானே. பிழை யைச் சுட்டிக்காட்டிக் கண்டித்தவர் வேறு யார்? பண்டித மணி சி. கணபதிப்பிள்ளை அவர்களேதான்.

## சிவசக்தி சொரூபம்

சிவமும் சக்தியும் கண்ணுக்குப் புலப்படாமல் உலக மெங்கும் கலந்து நின்று நிலவுகின்றன. சிவமயம் என்றும் சக்திமயம் என்றும் உபாசகர்கள் எழுதுவதும் கூறுவதும் இதுகருதியேயாம்.

மறைபொருளாய் நின்று அகிலாண்டங்களை இயக்கி வரும் ஆற்றலின் அற்புதத்தை விஞ்ஞானிகள் அறிந்து, தங்களிற் பெரியது ஆற்றல் என நம்புகின்றனர். சிவ சக்தியானது ஆற்றல் மாத்திரமல்ல, அது எங்களை ஆக்கி, அசைத்து, ஆட்கொள்வதுமாகும்.

சைவாசாரத்தின் வழியில் திருமணத் தம்பதிகளாய்ப் பீடத்தில் இருப்பவர்களைப் பார்வதி பரமேஸ்வரனாகப் பாவனை செய்வதும், மதிப்பதும் சம்பிரதாயபூர்வமாய சடங்கு.

மதிப்புக்குரிய தம்பதிகள் திருமணமாகும் வரை பிரமசரிய விரதமநுட்டித்தல் ஆற்றலையும் தருவதாகும். ஆஸ்திக வாழ்வுக்கு ஒழுக்கம், கட்டுப்பாடு, வாய்மை இன்றியமையாதவை.

★ சிரமப்படாமல் நல்லதைச் சாதிக்க முடியாது ★

## இப்படியும் நடந்தது

மகாஅலெக்சாண்டர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பாவையும் ஆசியாவையும் திருமணங்கள் மூலம் இணைக்கப் பாடுபட்டுத் தாமே முன்மாதிரியாக ஒருத்தியை மணந்து காட்டியவர்.

இன்று மத்திய கிழக்கு நாடுகளான அங்கானிஸ்தான், ஈருன், ஈராக், சௌடிஅரேபியா, திருன்ஸ்ஜோடன், பாலஸ்தீனம், சிரியா, துருக்கி முதலிய நாடுகள் முப் பெருங்கண்டங்களையே இணைப்பனபோல அமைந்துள்ளன. இவை உண்மையில் மேற்கு ஆசியநாடுகளேயாம்.

துருக்கி உலகப்புகழ்பெற்ற பழையநாடு. அது 1453 ஆம் ஆண்டளவில் கிரேக்க நாட்டில் புகுந்தமையால், கொன்ஸ்ரன்ரிநேப்பிள் நகரம் தடம்புரண்டுபோகக் கலைஞர்கள் தங்கள் ஏடுகளை ஏந்தியவாறு எங்காம் புக லிடம் என ஏங்கி ஐரோப்பாவெங்கும் ஏகியதால் மறு மலர்ச்சி இயக்கம் உண்டானது.

பெரிய பெரிய பேரரசுகளைத் தமிழரும் உருவாக்கி ஞர்கள், உரோமரும் உருவாக்கினுர்கள், ஐரோப்பாவில் பிருன்சியர், பிரித்தானியர், ஸ்பானியர், ஒல்லாந்தர் முதலானேரும் உருவாக்கினுர்கள். ஆனல் துருக்கியர் உருவாக்கிய பேரரசே நீண்டகாலம் நிலை நின்றதாகும்.

மேற்கு ஆசியநாடுகள் உலகுக்கு இருபெருமதங்களை உபகரித்ததோடு, உலகமளாவிய வர்த்தகத்துக்கும் மத்திய கேந்திரம் வழி அமைத்தது. டாடனல்ஸ் நீரிணையும் சுவெஸ்கால்வாயும் வர்த்தகப் போக்குவரத்துக்கு நாடி நாளங்கள் போலமைந்திருந்தன.

## அருகிவரும் அரசபரம்பரை

ஓர் ஊரில் ஒரு ராசாவாம் என்று தான் பாட்டி மாரும் பௌராணிகரும் பழங்காலத்தில் கதை சொல்லத் தொடங்குவார்கள். அக்காலத்தில் நாட்டுக்கு நாடு ராசாக்கள் இருந்தனர். நாட்டின் பிரிவுகளிலும் ராசாக் கள் இருந்தனர். எங்கள் இலங்கையிலும் யாழ்ப்பாணத்து அரசன், கோட்டே அரசன், கண்டி அரசன் என மூவிரா சாக்கள் இருந்தார்கள். தமிழ் நாட்டில் சேரன், சோழன், பாண்டியன் என மூவரசர்கள் முடிபுனைந்திருந்தார்கள். இங்ஙனமே உலகம் முழுவதிலும் இராசாக்கள் இருந்த காலத்தில் அதுவும் இருபதாம் நூற்றுண்டில் இங்கிலாந் தில் அரசனுயிருந்த ஏழாவது எட்வேட் மன்னர் 1910 இல் இறந்தபோது, ஒன்பது அரசர்களும், நான்கு இளவரசர் களும், நாற்பது அரச வம்சத்தவரும், ஏழு இராணிகளும் தங்கள் இறுதி மரியாதையைச் செலுத்தினுர்கள். அவர் கள் எழுபது தேசிய இனத்தவரின் மத்தியில் தங்கள் அஞ்சலியைச் செய்தார்கள்.

### வில்வை என்னும் கூவிளம்

சிவபெருமான் விரும்பும் வில்வை மகத்தான பச்சிலை. கண்வலி, கண்சிவப்பு முதலியன உண்டான வேளைகளில் வில்வந்தளிர்களை மெதுவாக வதக்கி, இளஞ்சூட்டோடு கண் இமைகளில் ஒத்தணம் பிடித்துப்பாருங்கள்.



## Less & More

— Swami Sivananda

You will enjoy wonderful health and supreme peace of the soul

| Less | | More |
|---|---|---|
| Eat | = | Masteculate |
| Clothe | = | Bathe |
| Sit | = | Serve |
| Hate | = | Love |
| Take | = | Give |
| Preach | = | Practise |
| Worry | = | Laugh |
| Rest | = | Work |
| Indulge | = | Restrain |
| Sleep | = | Meditate |

## அவிழுங்கள் பார்ப்போம்

1. உருவம் எதுவும் இல்லை
உடலும் எதுவும் இல்லை
உள்ளும் புறமும் போய்வருவான்
ஊர்கள் எல்லாம் சுற்றிடுவான்
உலகம் முழுதும் வலம் வருவான்

2. எத்தனை எத்தனை பேர் வந்தாலும்
ஏறி இருக்க இடந்தருவான்
அத்தனை பேரும் ஆடி அசைபினும்
அணுவளவும் தான் அசையான்

3. ஒருமுழ மூங்கிலில் ஓட்டைகள் உண்டு
ஊதி ஊதி விரலசைத்தால்
ஒய்யாரக் கீதம் ஓங்கார நாதம்

4. ஒருசாண் உடம்பில் ஒருதொகை பற்கள்
எண்சாண் உடம்பின்
உயர்ந்த இடத்தைத் தொடுவான்

5. ஒற்றைக் காலில் சுற்றிடுவான்
ஒய்யாரமாக ஆடிடுவான்
ஓய்ந்து போகும் வேளையில்
சாய்ந்து வீழ்ந்து படுத்திடுவான்

1. காற்று. 2. திண்ணை. 3. புல்லாங்குழல். 4. சீப்பு 5. பம்பரம்.

### மனிதருக்கு வாய்க்க வேண்டியவை

குணம், பொறுமை, விவேகம், சமாதானம், அன்பு, நேயம், தயவு, பரிவு, செல்வம், கல்வி, வாய்ப்பு முதலி யனவாம்.

★ பிரார்த்தனை பேராற்றல் வாய்ந்த பாதுகாப்பு ★

# English for you

**Figurative expressions explained**

1. To let sleeping dogs lie —
   to avoid stirring up trouble
2. To look at a gift cow in the mouth —
   to refuse to criticise a gift
3. To flog a dead horse —
   to concentrate on a subject which has been exausted.
4. To put the cart before the horse —
   to reverse the natural order of priorilies
5. A dark horse —
   a person with hidden talents
6. A dog in the manger —
   a person who prevents others from having what he himself has no use for
7. Every dog has his day —
   everyone however humble, has his moment of glory
8. To lead someone a dog's life —
   to make someone continuously wretched

## தை முதல் நாள்

சைவாகம முறைப்படி தாபிக்கப் பெற்றுப் பூசைகள் நடந்து வருகின்ற சிவன் கோயில்களில் தை முதல் நாள் சிறப்பான அபிடேகம், அர்ச்சனை ஆராதனை ஆகியவை ஆகம முறைப்படி நன்றாக நடைபெற்றன. வாழ்த்துகின்றோம் வணங்குகின்றோம். மற்றைய கோயில் முகாமையாளரும் அடுத்தமுறை இதைச் செய்து அருள் பாலிக்க வழியமைப்பார்களாக.

## அடுத்து வரும் மகா கும்பாபிஷேகம்

மண்கும்பான் வெள்ளைப்புற்றடி வீரகத்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேகம் 11 - 2 - 85 தை 29ஆம் நாள் சோமவாரத்தன்று சிறப்பாக நடைபெறத் திருவருள் பாலித்துள்ளது.

## நெல்லி மரத்தின் அருமை

நெல்லி மரத்தின் பயன் பற்றியும் அதன் கனியின் உணவுச் சத்தின் உயர்வு பற்றியும் நினைவுபடுத்துகிறோம்.

## பயறு, உழுந்து

நெல் அறுவடையான பின் வயல்களை வறட்சியடைய விடாமல் உடனடியாக எள்ளு, பயறு, உழுந்து முதலிய சிறுதானியங்கள் விதைத்துப் பயன்பெறுமாறு விநயமாக வேண்டுகின்றோம். தமிழ்நாட்டு வானொலி இப்பணி பற்றி அருமையாக வேண்டுகோள் விடுப்பதைக் கேட்டறியுங்கள்.



## அம்மையாருக்கு அறுபது

திருவருளும் குருவருளும் முன்னிற்க, அடியவர்கள் அன்பர்களின் ஆசிகள் துணைநிற்க, நாளும் நற்றமிழாலும் இன்னிசையாலும் அறநெறியும் அருள்நெறியும் எங்கும் பொலியச் செம்மை சான்ற சிவப்பணிபுரியும் பண்டிதை சைவப் புலவர் துர்க்காதுரந்தரி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்களை வாழ்த்தும் மில்க்வைற் தொழிலதிபர், அம்மையாரின் அறப்பணிச் செம்மை நோக்கி ஆராமையால் அறப்பணிச்செல்வி என்று அன்பு ததும்ப வாழ்த்தியுள்ளார்கள்.

# Give one word for:

1. In the distance
2. An age in history
3. Colour of Lemon
4. Group of cattle
5. What is measured by clocks
6. Piece of torn cloth
7. Instrument used for sewing
8. Open this to enter a room
9. Hill building insect
10. To prevent from taking
11. To gain knowledge
12. Time of year
13. What people bathe in
14. To give away a secret
15. To feed the body
16. Cutting utensil
17. To protect with kindness
18. A star having tail

| | | | |
|---|---|---|---|
| 1. Afar | 2. Era | 3. Yellow | 4. Herd |
| 5. Time | 6. Rag | 7. Needle | 8. Door |
| 9. Ant | 10. Gag | 11. Learn | 12. Season |
| 13. Tub | 14. Tattle | 15. Nourish | 16. Knife |
| | 17. Cherish | 18. Comet | |

★ பணிவினால் பெருஞ் சாதனைகளை உண்டாக்கலாம் ★

## தைப்பூசம்

தை மாதத்துச் சிறந்த நாள்களுள் ஒன்று பூசநாள். பூச நட்சத்திரம் பூரணையோடு கூடிச் சிறப்பிக்கும் மாதம் தை உதய காலம்போல அமைந்ததால், தை பிறந்தால் வழி பிறக்கும் என்பர்.

முன்னொரு காலத்தில் தை மாதத்துப் பூச நன்நாள் ஒரு வியாழக்கிழமையாகிய குரு வாரத்தில் சம்பவித்தது. அன்று அவ்வேளை, உலகத்துக்குக் கருத்தாவாகிய சிவ பெருமான் தமது சக்தியாகிய திருவருள் என்னும் உமாதேவியாருடன் ஞானம் நிரம்பிய சபையிலே ஆனந்த தாண்டவம் புரிந்தருளினார். அவர் செய்தருளிய திரு நடனத்தை உணரவும் கண்டு களிக்கவும் பெரும்பாக்கியப் பேறெய்தியிருந்தவர்கள் படைத்தல் தொழிற் பிரதிநிதி யாய பிரமனும், காத்தல் தொழிற் பிரதிநிதியாய திரு மாலும், தவத்தால் உயர்ந்த புலிக்கால் முனிவர் என் னும் வியாக்கிரபாதர் என்பாரும், பதஞ்சலி என்னும் பெரிய பாம்பும் மற்றும் பெரியவர்கள் ஒரு சிலருமாவர்.

என்றோ எப்பவோ திருவருள் ஒளிவீசிய வைபவத் திருநாள் இன்றுவரை சைவ உலகில் பெருநாளாகப் பாரம்பரியமாக நிலவிவருகிறது. தமிழ் கூறும் நல்லுல கத்தில் தூரகிழக்கில் சிங்கப்பூர், மலேயா முதலாய நாடுகளில் நாட்டார் எனப் பெயர்பெற்ற செட்டிமார் கள் அள்ளியுதவும் பெருஞ் செல்வத்தால் தைப்பூச விழா மிகச் சிறப்பாக நடைபெறுவதாகக் கேள்வி.

ஆயிரத்து இருநூறுண்டுகளுக்கு முன்பே திருஞான சம்பந்தமூர்த்திநாயனார் தைப்பூசப் பெருவிழாப் பொலிவை நமக்கெல்லாம் வற்புறுத்திப்போன அமைப் பில் அவ்விழா, பண்டைத் தமிழர் கண்ட பெருவிழா எனச் சொல்லாமலே அமையும்.

சைவத் தமிழ்ப் பண்பாட்டுச் சம்ஸ்காரங்கள் என வழங்கும் சுப காரியங்கள் யாவற்றுக்கும் தைப்பூச நாள் மிகவும் சிறந்த வேளையாகும். காது குத்துதல், சோறு தீற்றுதல், ஏடு தொடக்குதல், தீட்சை உபதேசம் பெறு தல், மனைகோலுதல், புதிதுண்ணல் முதலியன நாம் நாளாந்தம் கண்ட சாதாரண சம்ஸ்காரங்களாகும். நல்லூர் கந்தசுவாமியார் கோயில் மஞ்சமும், பிற கோயில்களின் சிறப்பான அருச்சனை, கொடியேற்றம், தேர் விழா யாவும் நடைபெறுதல் வழக்கம்

இற்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் சுந்தர சோழன் என்னும் மன்னன் காலத்துக் கல்வெட்டுகளில் திருவிடைமருதூரில் ஆரியக்கூத்து முதலிய நடைபெற்ற செய்தியும், தைப்பூச நாளில் நிருத்தம் ஆடிய பின் கூத்து கள் நடைபெற்றதாகவும் செய்திகள் உள்ளன.

## மில்க்வைற் செய்திபற்றிய செய்தி

மில்க்வைற் செய்தியைத் தபால் மூலம் மாதம் தவறாமல் பெறுவதற்கு பன்னிரண்டு இதழ்களுக்கு இருபத்தைந்து ரூபா செலுத்தியவர்களுக்கு, அன்று தொடக்கம் பன்னிரண்டு இதழ்கள் கிடைக்கும். கிடைக் கத் தவறினால் உடனடியாக மில்க்வைற் தொழிலகம் தபாற்பெட்டி 77, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு முறையிடுங்கள். பணஞ் செலுத்தியவர்களுக்குப் பற்றுச் சீட்டு உரிய முறையில் அனுப்புவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

## நல்லை ஆதீனத்தில் திருமுறைப் போட்டி

நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் திருமுறை மனனப் போட்டியும், திறமை காட்டியவர்களுக்கு வெண் பொற் பதக்கங்களும் வழங்குவதற்குத் திருவருள்பாலித் துள்ளது. போட்டியிற் கலந்துகொள்ள விரும்புவோர் 26-4-1967ஆம் நாளுக்குப் பின் பிறந்தவர்களாய் இருத் தல் வேண்டும். போட்டிக்குரிய திருமுறைப் பாடல்கள் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் பத்துப் பதிகங்கள், திருநாவுக்கரசு நாயனார் பத்துப் பதிகங்கள், சுந்தர மூர்த்தி நாயனார் பத்துப் பதிகங்கள், மாணிக்கவாசகர் திருவாசகம் திருச்சதகம் 100 பாடல்கள் மனனஞ் செய் தாக வேண்டும். போட்டிக்குரிய விண்ணப்பம் 28-2-1985ஆம் நாளுக்கு முன் அனுப்ப வேண்டும். விபரங் கள், தகவல்கள், பாடல் பிரதிகள் யாவும் ஆதீன மேலாளர், நல்லை ஆதீனம், யாழ்ப்பாணம். என்னும் விலாசத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


நீலந்தோய்க்கும் வேலைச்சிரமம் வேண்டாம்!

உங்கள் சீருடைகள் மிகுந்த வெண்மையடையச் சிறந்த வழி, சிரமமில்லாத - சிக்கனமான வழி, ஒன்றே ஒன்றுதான். அது

மில்க்வைற் நீலங்கலந்த நீலக்கட்டிகளை

சம்பூரண சலவைக்காக உபயோகித்தலாகும்.

பளிச்சிடும் வெண்மைக்குப் பாவியுங்கள்

மில்க்வைற் நீல சோப்




50 மில்க்வைற் நீலசோப் மேலுறைகளைக் கொடுத்து 1 அப்பியாசக் கொப்பி அல்லது 10 மேலுறைகளைக் கொடுத்து அன்னை இந்திராவின் அழகிய ஸ்ரிக்கரை இனமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்.


யாழ்ப்பாணம் சாந்தி அச்சகத்தில் அச்சிட்டவர் திரு. தி. நாகரத்தினம் யாழ்ப்பாணம் மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகத்தின் சார்பாக வெளியிட்டவர் "சிவநெறிப்புரவலர்" க. கனகராசா ஜே. பி. அவர்கள்
கௌரவ ஆசிரியர்: திரு. க. சி. குலரத்தினம் 1-2-85.